பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அணையிலே போதிய அளவு தண்ணீர் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கோரிக்கையை கவனித்து திறக்காவிட்டால் காங்கேயன் கால்வாய் பகுதி, அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி பகுதியைச் சேர்ந்த 1,500 ஏக்கர் பயிர்கள் கருகிவிடுகின்ற அபாயம் இருக்கிறது. எனவே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், கருகிவிடுகின்ற அபாயகரமான நிலையில் இருக்கின்ற அந்தப் பயிரைக் காப்பதற்கு இன்றைக்கே நடவடிக்கை மேற் கொண்டு அந்தக் கால்வாய்த் தண்ணீரைத் திறப்பதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரி களோடு கலந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சின்னமனூர் வட்டம் கருங்காட்டங்குளம் பகுதியில் வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு நீரின்மை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் வட்டம், கருங்காட்டங்குளம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் point of information, point of order அல்ல.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, சுமார் 150 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் நீரின்றி காய்ந்து போகும் நிலையில் உள்ளது. ஆகவே இந்தப் பயிரை பெரியாறு, சுருளி யாறு ஆகியவற்றினுடைய ஊற்று நீரைப் பயன்படுத்தி காப்பாற்ற அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சீர்காழி சிதம்பரம் தாலுக்காக்களிலுள்ள நெற்பயிர் களுக்குத் தண்ணீர்விட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்ற 28—3—1987 அன்று நான் கேட்டிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத் தின் மீது என்னுடைய சீர்காழி தாலுக்கா, தென்னாற்காடு

1987 ஏப்ரல் 8] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் தாலுக்கா காட்டுமன்னார்குடி தாலுக்காவினுடைய கடைசிப் பகுதியிலே ஏறக்குறைய 20,000 ஹெக்டேர் நிலங்களில் குள்ளந்தார் என்ற நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர் இல்லை என்று கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கர்நாடகத்திலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் பெற்று இருக்கிறோம், விரைவிலே தருகிறோம் என்று சொல்லி விவசாயத்திற்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பயிரானது மே மாதம் தான் அறுவடை ஆகும். 2, 3 தடவை தண்ணீர் தேவைப்படும். எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) அதை திரு. இராமமூர்த்தி, பிரசிடெண்ட், காங்கிரஸ் ஐ கொள்ளிடம் யூனியன் என்ற மரியாதைக்குரிய உறுப்பினர் எனக்கு அனுப்பியிருக்கிறார்.

"Lower Anicut in Coleroon river was shut down for irrigation due to level and inflow of water reaching the least minimum. In both Sirkazhi and Chidambaram taluks about 20,000 acres of paddy crops in flowering stage that shall give a yield of 40,000 tones of paddy worth about eight crores of rupees are very badly in need of minimum three more water wettings. . . . ." ஆகவே நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது குறைந்தது இரண்டு தடவையாவது தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் ஏற்கனவே குள்ளந்தார் பயிருக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். இன்னும் சேரவில்லை என்று சொன்னால் மறுபடியும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) மொழிபற்றிய அரசின் தீர்மானத்தின்மீது மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நீங்கள் தெரிவித்ததைப் போல பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. எலிசிட்டிங் இன்ஃபர்மேஷன் என்ற அடிப்படையில் கல்வி மானிய